ராஜாஜி பிறந்த தினம்: பிரதமர் மரியாதை

புது தில்லி, டிச. 10: சுதந்திரப் போராட்ட வீரர் ராஜாஜியின் பிறந்த தினத்தையொட்டி அவருக்கு பிரதமர் நரேந்திர மோடி மரியாதை செலுத்தினார்.

தமிழகத்தைச் சேர்ந்த ராஜாஜி வழக்குரைஞரும், சுதந்திரப் போராட்ட வீரரும், இந்தியாவைச் சேர்ந்த கவர்னர் ஜெனரலும் ஆவார். அவரது பிறந்த தினத்தையொட்டி பிரதமர் மோடி எக்ஸ் வலைதளப் பக்கத்தில் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:

ராஜாஜியை அவரது பிறந்த தினத்தில் நினைவுகூர்கிறோம். இந்திய சுதந்திரப் போராட்டத்துக்கு ஆற்றிய பங்களிப்புக்காகவும் இந்தியாவின் முன்னேற்றத்துக்கு மேற்கொண்ட முயற்சிகளுக்காகவும் அவர் நினைவில் கொள்ளப்படுகிறார். பன்முகத் திறன் கொண்ட ஆளுமையான ராஜாஜி, ஆட்சி நிர்வாகம், இலக்கியம், சமூக அதிகாரமளித்தல் ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தினார். ஒவ்வொரு இந்தியரும் கண்ணியம் மிகுந்த மற்றும் செழுமையான வாழ்க்கையை வாழ்வதை உறுதிப்படுத்த ராஜாஜியின் கொள்கைகள் நமக்கு உத்வேகம் அளிக்கின்றன என்று பிரதமர் தனது பதிவில் தெரிவித்துள்ளார்.

சிறந்த பொருளாதார வளர்ச்சிக்கு நடவடிக்கை

சஞ்சய் மல்ஹோத்ரா

புது தில்லி, டிச.10: பொருளாதார வளர்ச்சிக்காக சிறந்த நடவடிக்கைகளை மேற்கொள்வேன் என்று ரிசர்வ் வங்கியின் புதிய ஆளுநராகப் பதவியேற்க உள்ள சஞ்சய் மல்ஹோத்ரா செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸின் பதவிக் காலம் செவ்வாய்க்கிழமை நிறைவடைந்தது. அந்தப் பதவிக்கு மத்திய வருவாய் செயலர் சஞ்சய் மல்ஹோத்ராவை மத்திய அரசு நியமித்த நிலையில், அவர் புதன்கிழமை (டிச.11) பதவியேற்க உள்ளார்.

மெதுவான பொருளாதார வளர்ச்சி, அதிக பணவீக்கம் (விலைவாசி உயர்வு விகிதம்) ஆகிய இரட்டை சவால்களை இந்தியா எதிர்கொண்டு வரும் வேளையில், அவர் ரிசர்வ் வங்கி ஆளுநராகப் பதவியேற்க உள்ளார்.

இந்நிலையில், தில்லியில் அவர் செய்தியாளர்களிடம் செவ்வாய்க்கிழமை கூறுகையில், 'ரிசர்வ் வங்கி ஆளுநராகப் பொருளாதாரம் தொடர்பான அனைத்துக் கோணங்களையும் புரிந்துகொண்டு, அதன் வளர்ச்சிக்கு சிறந்த நடவடிக்கைகளை மேற்கொள்வேன்' என்றார்.

'ரெப்போ விகிதத்தால் அல்ல'–தாஸ்: தனது கடைசி பணி நாளில் மும்பையில் சக்திகாந்த தாஸ் செய்தியாளர்களிடம் கூறுகையில், 'பொருளாதார வளர்ச்சியில் சுணக்கம் ஏற்பட்டதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. வங்கிகளுக்கான குறுகிய கால கடன்கள் மீதான ரிசர்வ் வங்கியின் வட்டி விகிதத்தால் (ரெப்போ ரேட்) இந்தச் சுணக்கம் ஏற்படவில்லை.

வளர்ச்சி மற்றும் பணவீக்கம் இடையே மீண்டும் சமநிலையை ஏற்படுத்துவதே ரிசர்வ் வங்கிக்கு இருக்கும் மிக முக்கிய சவால். இந்திய பொருளாதாரம் வலுவாக உள்ள நிலையில், அது உலகளாவிய பாதிப்புகளை திறம்பட எதிர்கொள்ளும்' என்றார்.

'மிகச் சிறப்பான ஒருங்கிணைப்பு': சக்திகாந்த தாஸ் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில், 'கடந்த 6 ஆண்டுகளில் வரி வசூல் மற்றும் அரசின் செலவினம்–வட்டி விகிதங்கள் மற்றும் பண விநியோகம் இடையிலான ஒருங்கிணைப்பு மிகச் சிறப்பாக இருந்தது. இது பல்வேறு சவால்களை எதிர்கொள்ள உதவியது' என்றார்.

மும்பையில் மின்சார பேருந்து மோதி 7 பேர் உயிரிழப்பு

42 பேர் காயம்; 22 வாகனங்கள் சேதம்

மும்பை, டிச. 10: மகாராஷ்டிர தலைநகர் மும்பையில் பரபரப்பான சாலையில் திடீரென கட்டுப்பாட்டை இழந்து ஓடிய மின்சார பேருந்து, பல்வேறு வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் மீது மோதியதில் 7 பேர் உயிரிழந்தனர். காவலர்கள் உள்பட 42 பேர் காயமடைந்தனர். சுமார் 22 வாகனங்கள் சேதமடைந்தன.

திங்கள்கிழமை இரவு நடந்த இச்சம்பவம் தொடர்பாக பேருந்தின் ஓட்டுநரை கைது செய்து, காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மும்பை நகரில் அரசுக்கு சொந்தமான 'பிருஹன்மும்பை மின் விநியோகம் மற்றும் போக்குவரத்து நிறுவனம்' (பெஸ்ட்) சார்பில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இந்நிறுவனத்தின்கீழ் ஒப்பந்த அடிப்படையில் இயக்கப்படும் ஒரு மின்சார பேருந்து, சுமார் 50 பயணிகளுடன் குர்லா பகுதியில் உள்ள எஸ்.ஜி. பிரேவ் மார்க்கில் திங்கள்கிழமை இரவு 9.30 மணியளவில் சென்று கொண்டிருந்தபோது திடீரென ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து ஓடியது.

பரபரப்பான பிரேவ் சாலையில் பல்வேறு வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் மீது அதிவேகமாக மோதிய பேருந்து, பின்னர் ஒரு அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்துக்குள் புகுந்து நின்றது. பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இச்சம்பவத்தில் 49 பேர் காயமடைந்தனர். இவர்களில் படுகாயமடைந்த 3 பேர் திங்கள்கிழமை உயிரிழந்த நிலையில், சிகிச்சை பலனின்றி மேலும் 4 பேர் செவ்வாய்க்கிழமை உயிரிழந்தனர். 4 காவலர்கள் உள்பட 42 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

22 வாகனங்கள் சேதம்: பேருந்து இடித்து தள்ளியதிலும், தன்னோடு இழுத்துச் சென்றதிலும் 22 வாகனங்கள் சேதமடைந்தன. பேருந்தின் முன்பகுதியும் நொறுங்கியது.

முதல்கட்ட தகவலின்படி, பேருந்து கட்டுப்பாட்டை இழந்த பிறகு அதன் வேகம் அதிகரித்ததாக தெரியவந்துள்ளது. எனவே, இயந்திர ரீதியில் ஏதேனும் கோளாறு ஏற்பட்டதா அல்லது ஓட்டுநர் மீது தவறா என்பதைகண்டறியநிபுணர்கள் ஆய்வு மேற்கொண்டனர்.

ஹைதராபாதைச் சேர்ந்த ஓலெக்ட்ரா கிரீன்டெக் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட இப் பேருந்து, இவே டிரான்ஸ் என்ற நிறுவனத்திடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் இயக்கப்பட்டதாகும்.

ஓட்டுநர் கைது: பேருந்தின் ஓட்டுநர் சஞ்சய் மோரை காவல்துறையினர் கைது செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவத்தின்போது அவர் மது அருந்தியிருந்தாரா என்பதை கண்டறிய ரத்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

மும்பையில் நொறுங்கிய நிலையில் விபத்தை ஏற்படுத்திய மின்சார பேருந்து.

ரூ. 5 லட்சம் நிவாரணம் அறிவிப்பு

மின்சார பேருந்து மோதியதில் உயிரிழந்தோருக்கு இரங்கல் தெரிவித்த முதல்வர் தேவேந்திர ஃபட்னவீஸ், அவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.5 லட்சம் வழங்கப்படும் என்று அறிவித்தார்.

காயமடைந்தோரின் சிகிச்சை செலவு முழுவதையும் அரசு ஏற்கும்; பாதிக்கப்பட்டோர் குடும்பங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மேற்கொள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன் என்று அவர் தெரிவித்தார்.

உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு பெஸ்ட் நிறுவனம் சார்பில் தலா ரூ.2 லட்சம் வழங்கப்படும் என்று அந்நிறுவனம் தெரிவித்தது. மேலும், இச்சம்பவம் குறித்து விசாரிக்க தனிக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

உள்நோக்கத்துடன் நடந்த சம்பவமா?

மின்சார பேருந்தின் ஓட்டுநர் சஞ்சய் மோர் (54) மும்பை நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை ஆஜர்படுத்தப்பட்டபோது, அவரை காவலில் எடுத்து விசாரிக்க காவல் துறையினர் அனுமதி கோரினர். 'இது உள்நோக்கத்துடன் நடந்த சம்பவமா, விபத்தை ஏற்படுத்த பேருந்தை அவர் ஆயுதமாக பயன்படுத்தினாரா என்பதை கண்டறிய தீவிர விசாரணை நடத்த வேண்டியுள்ளது. மின்சார வாகனங்களை இயக்க உரிய பயிற்சி பெற்றாரா என்பதையும் விசாரிக்க வேண்டும்' என்று காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, அவரை டிச.21–ஆம் தேதி வரை போலீஸ் காவலில் விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

மாலத்தீவு கல்லூரியின் புனரமைப்புக்கு ரூ.4 கோடி: இந்தியா நன்கொடை

மாலி, டிச.10: மாலத்தீவு கல்லூரியின் புனரமைப்பு பணிகளுக்கு 8.5 மில்லியன் மாலத்தீவு ரூஃபியாவை (சுமார் ரூ.4.68 கோடி) இந்தியா நன்கொடையாக அளித்துள்ளது.

இதுதொடர்பாக அந்நாட்டு உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை அமைச்சர் அலி இயுசான் கூறியதாக அந்நாட்டு ஊடகத்தில் தெரிவிக்கப்பட்டதாவது:

மாலத்தீவின் அடு நகரில் உள்ள தேசிய காவல் மற்றும் சட்ட அமலாக்க கல்லூரியின் புனரமைப்பு பணிகளுக்காக 8.5 மில்லியன் மாலத்தீவு ரூஃபியாவை இந்தியா நன்கொடையாக அளித்துள்ளது. இந்திய அரசுக்கு நன்றி. இது இந்தியா, மாலத்தீவு இடையே உள்ள சிறப்பு உறவை பிரதிபலிக்கிறது என்றார்.

ADITYA BIRLA CAPITAL

பாதுகாப்பு முதலீடு நிதியீடு ஆலோசனை

ஆதித்ய பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: இந்தியன் ரேயான் காம்பௌண்டு, வேரவல், குஜராத் – 362266.

கிளை அலுவலகம்: 1/276/2, தரைத்தளம், கந்தஸ்வர்ணா மெகா மால், பிளாக் B, சாரதா கல்லூரிச் சாலை, ஃபேர்லேண்ட்ஸ், சேலம் – 636016.

"பிற்சேர்க்கை IV–A"

[பார்க்க விதி 8(6)]

அசையாச் சொத்தின் விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002 (54/2002), விதிகள் 8(6) மற்றும் 9(1) ஆகியவற்றின் கீழான அசையாச் சொத்தின் விற்பனைக்கான E–ஏல அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில் **M/s** சாய் பருப்பு ஆலை, திரு. கணேஷ் மற்றும் திருமதி அருணா ஆகிய கடன்தாரர்கள்/கூட்டுக் கடன்தாரர்கள்/அடமானதாரர்களிடமிருந்து ஈடு பெற்றுக் கடனளித்தவருக்குவர வேண்டியுள்ள 08.11.2024 நாள்படியான ரூ.1,35,68,462/– (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தைந்து இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து நானூறற்று அறுபத்திரண்டு மட்டும்) தொகையைத் தொகை பெறப்படும் நாள் வரையான மேல் வட்டி மற்றும் இதர செலவுகளுடன் சேர்த்து திரும்பப் பெறும் பொருட்டு, ஈடு பெற்றுக் கடனளித்தவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளதும் ஈடுபெற்று கடனளித்த ஆதித்ய பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் 08.08.2024 அன்று நேரடி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள அசையாச் சொத்தானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி" மற்றும் "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்" எனும் முறையில் 31.12.2024 அன்று விற்பனை செய்யப்பட உள்ளது.

இதன் குறைந்தபட்ச விலை மற்றும் டேவணித் தொகை (EMD) விவரங்கள் பின்வருமாறு:

அசையாச் சொத்தின் விவரம்	குறைந்தபட்ச விலை	டேவணித் தொகை (EMD)
இனம் எண் I: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய சொத்து. அமைவிடம் – சேலம் மாவட்டம், சேலம் மேற்குப் பதிவு மாவட்டம், சூரமங்கலம் சார்பதிவு மாவட்டம், சேலம் மேற்கு வட்டம், அழகாபுரம் கிராமம். சர்வே எண் 17/2, புஞ்சை ஹெக்.1.78.5, தீர்வை ரூ.4.40, உட்பிரிவுப்படி சர்வே எண் 17/2A1A4, மேற்படி சர்வே நிலம் மற்றும் இதர சர்வே நிலங்கள் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டது. இந்த மனைகளில் அடங்கிய மனை எண் 8, பரப்பளவு 2137 சதுர அடிக் கொண்ட நிலம் இந்த விவரங்களுக்கு தொடர்புடையது. இதன் எல்லைகள் மற்றும் அளவுகள் பின்வருமாறு: மாரியப்பன் மற்றும் பிறருடைய நிலத்துக்குக் கிழக்கில், 25 அடி வடக்கு–தெற்கு சாலைக்கு மேற்கில், பாலகிருஷ்ணன் அவர்களின் மனை எண் 7–க்கு வடக்கில், மனை எண் 15–க்குத் தெற்கில். மேற்படி எல்லைகளுக்கிடையே உள்ள அளவு: கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் – 61 அடி, தெற்குப் பக்கம் – 60 அடி, வடக்குத் தெற்காகக் கிழக்குப் பக்கம் – 30 அடி, மேற்குப் பக்கம் – 41'3 அடி. மொத்தம் 2137 சதுர அடிக் கொண்ட நிலம் முழுவதும் மற்றும் அனைத்து வழிப்பாதை உரிமைகள் மற்றும் அங்கு இணைந்துள்ள பழுக்க உரிமைகள் உட்பட. நகர சர்வேப்படி வார்டு–D, பிளாக் –4, TS எண் 7/10. இது சேலம் மாநகராட்சி எல்லைகளுக்கு உட்பட்டது. இந்தச் சொத்து "ஜெயா நகர்" லேஅவுட்டில் அமைந்துள்ளது.	ரூ.59,85,211/–	ரூ.5,98,521.10/–
இனம் எண் II: A – "அட்டவணை" – சேலம் மாவட்டம், சேலம் மேற்குப் பதிவு மாவட்டம், சூரமங்கலம் சார்பதிவு மாவட்டம், சேலம் வட்டம், ரெட்டியூர் கிராமத்தைச் சேர்ந்த சர்வே எண் 35/2, புஞ்சை ஏக்கர் 5.67, தீர்வை ரூ.8.55, புதிய உட்பிரிவுப்படி சர்வே எண் 35/2A புஞ்சை ஹெக்டேர் 1.34.0, தீர்வை ரூ.5.16, உட்பிரிவுப்படி சர்வே எண் 35/2A1, புஞ்சை ஹெக்டேர் 1.30.5, தீர்வை ரூ.5.00, இதிலடங்கிய புஞ்சை ஏக்கர் 0.72 சென்ட் அல்லது 31378 சதுர அடிக் கொண்ட நிலம், உட்பிரிவுப்படி வார்டு–C, பிளாக்–4, TS எண் 11/2, உட்பிரிவுப்படி TS எண் 11/14, 11/15, தொடர்புடைய கோல்டன் வேலி பிளாக் –A, பிளாக் –B, மொத்தப் பரப்பளவு 31378 சதுர அடிக் கொண்ட நிலம், இதிலடங்கிய 584–3/4 சதுர அடிக் கொண்ட பிரிபடாப்பங்கு உட்பட "A" அட்டவணைச் சொத்துக்கு தொடர்புடையது. இதன் எல்லைகள் மற்றும் அளவுகள் பின்வருமாறு: சர்வே எண் 35/2B1–இல் உள்ள நிலத்துக்கு வடக்கில், K. சின்னப்பன் அவர்களின் நிலத்துக்குத் தெற்கில், சர்வே எண் 35/1, 6A ஆகியவற்றில் உள்ள வாய்க்காலுக்குக் கிழக்கில், வடக்குத் தெற்கு 30 அடிச் சாலைக்கு மேற்கில். மேற்படி எல்லைகளுக்கிடையே உள்ள அளவு: கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் – 242–1/4 அடி, தெற்குப் பக்கம் – 217–3/4 அடி, வடக்குத் தெற்காகக் கிழக்குப் பக்கம் – 135 அடி, மேற்குப் பக்கம் – 136–1/2 அடி. மொத்தம் 31378 சதுர அடிக் கொண்ட நிலம், இதிலடங்கிய 492–1/4 சதுர அடிக் கொண்ட பிரிபடாப்பங்கு நிலம் உட்பட "A" அட்டவணைச் சொத்துக்கு தொடர்புடையது."B" அட்டவணை – மேற்படி "A" அட்டவணைச் சொத்தில் அடங்கிய பிரிபடாப்பங்கு 492–1/4 சதுர அடிக் கொண்ட நிலம் அட்டவணை–B சொத்தில் தொடர்புடையது."C" அட்டவணை – மேற்படி "A" அட்டவணைச் சொத்தில் அடங்கிய 31378 சதுர அடிக் கொண்ட நிலத்தில் கட்டப்பட்டுள்ள ஒப்புதல்பெற்ற "கோல்டன் வேலி" என்ற அடுக்குமாடிக் குடியிருப்பு, மேற்படி அடுக்குமாடிக் குடியிருப்பில் அடங்கிய தரைத்தளத்தில் உள்ள அடுக்கக எண் B–104, பரப்பளவு 1004 சதுர அடிக் கொண்ட மேல்கட்டுமானப் பரப்பு மற்றும் மேற்படி கட்டடத்தின் அனைத்து பொருத்தல்கள், கதவு எண் B–104, வரித் தீர்வைப்படி புதிய கதவு எண் 101/28 உட்பட அட்டவணை–B சொத்தில் தொடர்புடையது."D" அட்டவணை – மேற்படி "கோல்டன் வேலி" என்ற அடுக்குமாடிக் குடியிருப்பில் கார், இருசக்கர வாகனம், படிக்கட்டுகள், லிஃப்ட் ஆகியவற்றுக்காக ஒதுக்கப்பட்ட இடம், 1/56ஆவது பங்கில் அடங்கியது, இத்துடன் அனைத்து உரிமைகள், ஆழ்துளை கிணறு, நீர் சப்ளை யூனிட், டீசல் ஜெனரேட்டர், கார் நிறுத்துமிடம், லிஃப்ட், படிக்கட்டுகள், மதில் சுவர், மதில் சுவர் விளிக்கு, கேட், மோட்டார்கள், நீர் தொட்டிகள், கழிவுநீர் தொட்டி, வடிகால், விளையாட்டு மைதானம், வாட்டில் கார்க் கோர்ட், பெண்கள் உடற்பயிற்சி கூடம், ஆண்கள் உடற்பயிற்சி கூடம் உட்பட 1/56ஆவது பங்கில் அடங்கியது. இத்துடன் அனைத்து வழிப்பாதை உரிமைகள் மற்றும் அங்கு இணைந்துள்ள பழுக்க உரிமைகள் உட்பட. மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்து சேலம் மாநகராட்சி எல்லைகளுக்கு உட்பட்டது.	ரூ.53,86,488/–	ரூ.5,38,648.80/–
மொத்தம்	ரூ.1,13,71,699/–	ரூ.11,37,169.90/–

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய ஈடுபெற்று கடனளித்த நிறுவனத்தின் https://mortgagefinance.adityabirlacapital.com/Pages/Individual/Properties-for-Auction-under-SARFAESI-Act.aspx அல்லது https://sarfaesi.auctiontiger.net இணையத்தளத்தில் அளிக்கப்பட்டுள்ள இணைப்பைப் பாருங்கள்.

நாள்: 11.12.2024
இடம்: சேலம்
கடன் கணக்கு எண்: ABSLMLAP000000643029

ஆதித்ய பிர்லா ஃபைனான்ஸ் லிமிடெட் சார்பில்
அதிகாரப்பூர்வ அலுவலர்
(9092596999 / 9677317779)

சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
CENTRAL TO YOU SINCE 1911

மண்டல அலுவலகம் : 14/15, வெரைட்டி ஹால் ரோடு, கோவை - 641 001

மாபெரும் மின்னணு ஏல அறிவிப்பு
(E-Auction Notice)
(SARFAESI சட்டம் 2002–ன் கீழ்)

SARFAESI சட்டம் 2002, மற்றும் அதன் பிரிவு 13 (4) ன் கீழ் அதிகாரம் பெற்ற சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்களை கீழ்க்கண்ட தேதிகளில் சுவாதீனம் எடுத்திருந்தார், இதனைத்தொடர்ந்து கீழ்க்கண்ட தேதிகளில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் பின்வரும் கடன் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு வர வேண்டிய கடன் நிலுவைத் தொகைகளை வட்டியுடன் வசூலிக்கும் விதமாக பட்டியலில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையுடன் கூடிய கேட்பு அறிவிப்பினை அனுப்பியிருந்தார். ஆனால் கடன்தாரர் / உத்தரவாதம் அளித்தவர் / அடமானம் வைத்தவர் கடன் நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்த தவறியதால், இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரி மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13 (4) (a) மற்றும் விதி 8 மற்றும் 9 ன் கீழ், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் வங்கிக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூல் செய்திட உள்ளார். இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரியின் மூலமாக https://ebkray.in என்ற இணையதளத்தின் வாயிலாக மின்னணு ஏல முறையில் விற்பனை நடைபெறும்.

கிளை : மேட்டூர் கிளை. கடன் கணக்கின் பெயர் : கடன் தீர்ப்பாளர் : M/s.தெய்வானை சின்ட்டர் மெட்டல்ஸ் பிரைவேட் லிமிடெட் [கடன் தீர்ப்பாளர் வசம் உள்ளது], 397, ப்ரிசிஷன் பிளாசா, 3-வது தளம், அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600018. **கடன்தாரர்கள் :திருமதி.தெய்வானை, இயக்குனர், M/s.தெய்வானை சின்ட்டர் மெட்டல்ஸ் பிரைவேட் லிமிடெட்,** பெரியசாத்பாடி கிராமம், மேச்சேரி வழி, சேலம் மாவட்டம். முகவரி : 4/1/82A, ஸ்ரீ நகர், கேபாட் சன்மார் லிமிடெட் எதிரில், ராமன் நகர் அஞ்சல், மேட்டூர் அணை, சேலம் - 636402. **திரு.M.கந்தவேல், இயக்குனர், M/s.தெய்வானை சின்ட்டர் மெட்டல்ஸ் பிரைவேட் லிமிடெட்,** பெரியசாத்பாடி கிராமம், மேச்சேரி வழி, சேலம் மாவட்டம். முகவரி : ARRS மெஜஸ்டிக் அப்பார்ட்மென்ட்ஸ், 2/481, சூரமங்கலம் மெயின் ரோடு, சேலம் - 636005. **திரு.K.M.ரவிச்சந்திரன், நிர்வாக இயக்குனர், M/s.தெய்வானை சின்ட்டர் மெட்டல்ஸ் பிரைவேட் லிமிடெட்,** பெரியசாத்பாடி கிராமம், மேச்சேரி வழி, சேலம் மாவட்டம். முகவரி : 4/1/82A, ஸ்ரீ நகர், கேபாட் சன்மார் லிமிடெட் எதிரில், ராமன் நகர் அஞ்சல், மேட்டூர் அணை, சேலம் - 636402. **திரு.D.R.ஆனந்த், இயக்குனர், M/s.தெய்வானை சின்ட்டர் மெட்டல்ஸ் பிரைவேட் லிமிடெட்,** பெரியசாத்பாடி கிராமம், மேச்சேரி வழி, சேலம் மாவட்டம். முகவரி : A13, பிருந்தாவன் வசந்தம் அப்பார்ட்மென்ட்ஸ், பெருமாள்மலை சாலை, நரசோதிப்பட்டி,சேலம் - 636004. **கடன் நிலுவைத் தொகை : 23.09.2013 வரையில் ரூ.7,39,22,305.65 மற்றும் வட்டி, ஏனைய கட்டணங்கள் சேர்த்து. கேட்பு அறிவிப்பு தேதி : 26.03.2014. சுவாதீனம் எடுக்கப்பட்ட தேதி : 21.08.2014. சொத்து விபரம் : சொத்து 1 :** குடியிருப்பு காலி நிலம் பின்வருமாறு அமைந்துள்ளது. பழைய S.No.671/1, புதிய S.No.671/11, பட்டா எண்.1778, கோனூர் மேற்கு கிராமம், மேட்டூர் தாலுக்கா, சேலம் மாவட்டம், தமிழ்நாடு - 636403. விஸ்தீரணம் 0.43 ஏக்கர் அல்லது 18730.80 சதுரடி (43 சென்ட்) ஆனது திரு.K.M.ரவிச்சந்திரன் அவர்களின் பெயரில் அமைந்துள்ளது. எல்லைகள் : வடக்கில் பஞ்சாயத்து சாலை மற்றும் துரைசாமி நிலம், கிழக்கில் R.ரவி, அய்யாவு மற்றும் பூசானம் நிலங்கள், தெற்கில் முத்து நிலம், மேற்கில் சர்வே எண்.671/11-ல் உள்ள மீதமுள்ள நிலம். **காப்பு விலை : ரூ.1,03,50,000/-. முன்வைப்புத் தொகை : ரூ.10,35,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-.**

சொத்து 2 : 0.85 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள காலி நிலம் S.No.102/2M & 102/2N, வார்டு எண்.13, மூப்பர் வீதி, கருப்பர் கிராமம், ஓமலூர் தாலுக்கா, சேலம் மாவட்டம், தமிழ்நாடு - 636012. சொத்து திரு.K.M.ரவிச்சந்திரன் அவர்களின் பெயரில் அமைந்துள்ளது. எல்லைகள் : வடக்கில் S.No.102/1C1-ல் உள்ள நிலம், கிழக்கில் 102/L-ல் உள்ள நிலம், தெற்கில் திருமதி.தெய்வானை நிலம், மேற்கில் S.No. 102/3 & S.No.157-ல் உள்ள நிலம். **காப்பு விலை : ரூ.90,00,000/-. முன்வைப்புத் தொகை : ரூ.9,00,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-.**

சொத்து 3 : 0.87 ¼ ஏக்கர் விஸ்தீரணம் உள்ள காலி நிலம் S.No.102/2M & 102/2N, வார்டு எண்.13, மூப்பர் வீதி, கருப்பர் கிராமம், சேலம் மாவட்டம், தமிழ்நாடு. சொத்து திருமதி.M.R.தெய்வானை அவர்களின் பெயரில் அமைந்துள்ளது. எல்லைகள் : வடக்கில் S.No.102/2M-ல் உள்ள நிலம், இதில் K.M.ரவிச்சந்திரன் அவர்களிடம் இருந்து M நிர்மலா அவர்களால் வாங்கப்பட்ட நிலம், தெற்கில் S.No.157-ல் உள்ள நிலம், கிழக்கில் SNo.102/L-ல் உள்ள நிலம், இதில் வண்டித்தடம் மற்றும் கிணறு, மேற்கில் கிழக்கில் தென்வடல் 6 அடி பொது வழித்தடம் சைட் எண்.82-ல் உள்ளது. **காப்பு விலை : ரூ.89,00,000/-. முன்வைப்புத் தொகை : ரூ.8,90,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-. ஏலம் நடைபெறும் தேதி : 26.12.2024. ஏலம் நடைபெறும் நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை 10 நிமிட கால நீட்டிப்புடன் .** சொத்தினை பார்வையிடும் தேதி : **அனைத்து வேலை நாட்களிலும் 09.12.2024 முதல் 20.12.2024 தேதி வரையில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். முன்வைப்புத் தொகை செலுத்த கடைசி தேதி : 21.12.2024. சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, மேட்டூர், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / கிளை மேலாளர் : Mob No : 8489903017, முதன்மை மேலாளர் : Mob No : 9047005073**

நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் : 1. ஏல விற்பனை ஆன்லைன் மின்னணு ஏலம் / ஏலம் கோருதல் என்ற முறையில் https://ebkray.in என்ற இணையதளத்தின் வாயிலாக மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் (ஏலம் முடிவுக்கு வரும் வரையில் 5 நிமிடம் கால நீட்டிப்புடன்) நடைபெறும். 2. ஏல விண்ணப்பங்களை ஆன்லைன் முறையில் 21.12.2024, மாலை 4.00 மணி அளவிலோ அல்லது அதற்கு முன்பாகவோ சமர்ப்பிக்க வேண்டும். 3.மின்னணு ஏல விற்பனையானது **"எப்படி எங்கு உள்ளனவோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் நடைபெறும். 4. விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு ஏல நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் ஏல விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு முன்பாக https://ebkray.in என்ற இணையதளத்திற்கு சென்று முழு விபரங்களுடன் கூடிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை அறிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். 5. வெற்றிபெற்ற ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர், வருமான வரிச் சட்டம் 1961-ன் உட்பிரிவு 194 IAன் பிரகாரம் ரூ.50.00 லட்சம் மற்றும் அதற்கு மேலான மதிப்பினை உடைய அசையாச் சொத்துக்களின் விற்பனை நடைமுறைகளில் 1% TDS தொகையினை செலுத்த வேண்டும். இத்தொகையினை படிவம் 26QB ல் சலான் (Challan) பூர்த்தி செய்து செலுத்தியதன் பின்னர் அதற்கான TDS சான்றிதழின் அசல் இரசீதினை வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். 6. மேலும் சொத்து தொடர்பான விபரங்களை அறிய **சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, மேட்டூர், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / கிளை மேலாளர் : Mob No : 8489903017, முதன்மை மேலாளர் : Mob No : 9047005073, முதன்மை மேலாளர் (RO) : Mob No : 8489903057, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, மண்டல அலுவலகம், கோயம்புத்தூர், மின்னஞ்சல் முகவரி :recvcoimro@centralbank.co.in,** அவர்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். ஏலதாரர் மேற்கண்ட இணையதளத்தில் பதிவு செய்து கொண்ட பின்னர், விருப்பமுள்ள ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர் பின்வரும் ஆவணங்களை ஏல விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் கடைசி தேதிக்கு முன்பாக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். 1) NEFT/RTGS சலான் ஆகியவற்றின் நகல், 2) PAN கார்டு நகல், 3) அடைய